**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண் 135 /2019**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04–ம் நாள் திங்கள்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.12.2023 | தந்தை/கணவர் பெயர்: | முகம்மது ஏகைய்யா |
| பெயர்: | ஜெகபர் சாதிக் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | கடவாசல் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 53/2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 04.12.2023.**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

03.05.2019–ம் தேதியிட்ட தாவா சொத்தை நான் சம்மந்தம் என்பவரிடம் கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரத்தின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1 –ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 15.10.1997–ம் தேதியிட்ட தாவா சொத்தை நான் பரமசிவம் பிள்ளை என்பவரிடம் கிரயம் பெற்றதற்கான சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.2 –ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்பட நகலை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.3 –ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. (பிரதிவாதி தரப்பில் புகைப்படமானது இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65-B -படியான சான்று இல்லையென ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது). நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடங்கள் முறையே **நீ.ம.சா.ஆ. 1 முதல் நீ.ம.சா.ஆ.3-** ஆகவும் வட்டசார் ஆய்வாளர் நில அளவை அவர்களின் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே **நீ.ம.சா.ஆ. 4 மற்றும் நீ.ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.